ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2092/54 - 2018 ඔක්තෝබර් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.11
*2092/54 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இல.: ஸ்ரீ ஜயபுர/la/76/பாதுகாப்பு.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/ 4/ 2017/ D/ 140.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியினை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின் ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலாளர் பிரிவில், கோட்டே நகரசபை எல்லைக்குட்பட்ட, பிட்டகோட்டே கிராமத்தில் அமைந்துள்ள முழுமையான வரைபட இல. 9778 ஐக் கொண்ட துண்டு இல. 01 இன் விபரங்கள் பின்வருமாறு:

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : மடத்தியகாஹாவத்த; விபரம் : ஒன்றுடன் மற்றொன்று தொடர்புபடுத்தப்பட்ட நிரந்தரமான இரண்டு கட்டிடங்களும் மற்றும் இரண்டு நிரந்தரமான இரண்டு, மூன்று அடுக்குமாடிக் கட்டிடங்களும் உள்ளன; உரிமை கோருபவர் : தேட முடியாதுள்ளது; விஸ்தீரணம்: 0.1317 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
341/3, கோட்டே வீதி,
ராஜகிரிய,
2018, ஒற்றோபர் 03.

10 - 1369

1A - G 28716 - 17 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.